இடாப்பைக் காண்பிப்பதற்கான கடமை.

**7.** (1) தொழில்தருநர் ஒவ்வொருவரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்போது, பரிசோதனைக்காக இடாப்பைக் காண்பித்தல் வேண்டும் அல்லது அதன் உண்மையான பிரதியைக் கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது அத்தகைய இடாப்பின் பிரதியொன்று எடுக்கப்படுவதனை அனுமதித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள எவரேனும் வேலையாளரின் தொழில்தருநர் ஒருவர்-

(அ) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட இடாப்பைப் பேணுவதற்கும் வைத்திருப்பதற்கும் தவறியுள்ளவிடத்து; அல்லது

(ஆ) 6 ஆம் பிரிவின்கீழ் அதனைப் பரிசோதனைக்காகக் காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்வதற்குத் தவறுமிடத்து,

ஆணையாளர் தலைமையதிபதி, அவருக்குக் கிடைக்கக்கூடிய வாய்மொழிமூலமான மற்றும் ஆவணமுறையான எல்லாச் சான்றுகளினதும் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வேலையாளருக்குச் செலுத்தப்படற்பாலதான, விடயத்துக்கேற்ப, வேதனத்தை அல்லது அதன் குறைக்கொடுப்பனவை மதிப்பீடுசெய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் வேதனத்தின் அல்லது அதன் பாகத்தின் கொடுப்பனவில் தவறுகை புரியப்படுமிடத்து 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

தேசிய குறைந்தபட்ச வேதனத்தின் கொடுப்பனவில் தவறுகை புரியப்படுகின்றமைக்கெதிரான வழக்கு.

**8.** (1) எவரேனும் வேலையாளருக்கு அல்லது வேலையாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான தேசிய குறைந்தபட்ச மாதாந்த அல்லது நாளாந்த வேதனத்தைச் செலுத்தவதற்கு எவரேனும் தொழில்தருநர் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நுண்ணாய்வின் பின்னர், தொழில்தருநர் அத்தகைய

அத்தவறு தமது சம்மதமோ அல்லது மறைமுக ஆதரவோ இல்லாமல் புரியப்பட்டதென்றும், தமது பணிகளின் தன்மையையும் தொடர்புபட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்க வேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அவசியமான நிபந்தனைகள்.*

**11.** இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கெதுவும், ஆணையாளர் தலைமையதிபதியினாலன்றி அல்லது அவரின் எழுத்திலான முன்னனுமதியுடனன்றி, தொடுக்கப்படலாகாது.

*சட்டத்தைப் பொருளமைத்துக் கொள்ளல்.*

**12.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றைக் குறைப்பனவாகவல்ல:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும்பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**13.** இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எவரேனும் வேலையாளுக்கு எவரேனும் தொழில்தருநரால் கொடுப்பனவுசெய்யப்படற்பாலதான தேசிய ஆகக்குறைந்த மாதாந்த அல்லது நாளாந்த வேதனத்தின் ஏதேனும் செலுத்தப்படாத தொகை இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று காணப்படுமிடத்தும் அத்தகைய தொழில்தருநர் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆறு மாத காலப்பகுதியொன்றினுள் சமமான மாதாந்த தவணைக் கட்டணங்களில் அல்லது உயரிய மாதாந்த தவணைக் கட்டணங்களில் அத்தகைய சென்மதிகளை அத்தகைய வேலையாளுக்கு செலுத்துகின்றவிடத்தும், அத்தகைய தொழில் தருநர் எல்லா நோக்கங்களுக்கும் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

